உ

சிவமயம்.

குள்ளத்தாரா சிந்து.



சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1925

கடவுள் துணை.

குள்ளத்தாரா சிந்து.

விநாயகர் வணக்கம்.

விருத்தம்.

சிந்துசூழுலகிலுள்ளோர் திரௌபலங்கொள்ளவேண்டி, விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதி மாலைதன்னை, கந்தமார்சிந்தாய்கூறக் கரிமுகனுபய பொற்பூங், கொந்தலர்க்கழலைநாளுங் கூப்பியேபணி குவாமால்

நூன்முகம்.

சிந்து கண்ணிகள்.

சித்திவிநாயகனை ஏ குள்ளத்தாரா
சிந்தைதனிலேவசிப்பாய் ஏ குள்ளத்தாரா
ஏகுளிக்கிதில்லாலே நீ முன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவசிப்பாய் ஏ குள்ளத்தாரா.

பாடலீசன் பொற்பதத்தை ஏ குள்ளத்தாராநீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ குள்ளத்தாரா ௨
பேர்பெரியநாயகியை ஏ குள்ளத்தாராநீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏகுள்ளத்தாரா ௩
வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா ௪
வள்ளிதெய்வானைபதங் குள்ளத்தாராநீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௫
ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராநீ
யன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௬
செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா ௭
தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராநீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௮
ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா என
தன்பின்வழியேநடங்கிற் குள்ளத்தாரா ௯
சந்த்ரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா வதைச்
சாரவும்பொன்னேணியுண்டு குள்ளத்தாரா ௰
பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா வத்தப்
பற்றப்பரிசத்தனுண்டு குள்ளத்தாரா ௧௧

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமூர்த்தமுண்டிருப்பாய் குள்ளத்தாரா ௧௨
எமனுமடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிநடப்பையாகில் குள்ளத்தாரா ௧௩
இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாராசொல்
இருவினையகன்றிடுவாய் குள்ளத்தாரா ௧௪
கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா ௧௫
தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா ரத்ன
சடைபில்லைதானுமுண்டு குள்ளத்தாரா ௧௬
சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா வகைச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா ௧௭
காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா நல்ல
கம்மல்சிமிக்கியுண்டு குள்ளத்தாரா ௧௮
கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா நற்
கொந்தளப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா ௧௯
கத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா நல்ல
கனத்தசம்புவுமுண்டு குள்ளத்தாரா ௨௰
நத்துமூக்குத்தியுண்டு குள்ளத்தாராநீ
நளினமாய்ப்பூட்டிக்கொள்ளக் குள்ளத்தாரா ௨௧

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா உஉ
கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா உங
இடையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா
இசைந்தஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா உச
பாதசரந்தண்டையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உரு
விரலிற்றரித்திடவும் குள்ளத்தாரா வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா உசா
இழையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா உனக்கு
சித்திரவண்ணச்சேலையுண்டு குள்ளத்தாரா உஎ
சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா திகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா உஅ
பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா உகூ
தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாராநீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா ஙய
வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா நீ
வேணதையனுபவிப்பாய் குள்ளத்தாரா ஙக

கைப்பிடிக்ககால்பிடிக்கக் குள்ளத்தாரா சொலுங்
கனத்ததோழிகளுண்டு குள்ளத்தாரா ௩௨
ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா ௩௩
தந்தநாற்காலியுண்டு குள்ளத்தாரா நீ
சார்ந்துகொண்டிருப்பதற்கு குள்ளத்தாரா ௩௪
சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா ௩௫
பொன்னுஞ்சற்பலகையுண்டு குள்ளத்தாரா என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா ௩௬
நன்னயமாய்பேசுதற்கு குள்ளத்தாரா நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா ௩௭
மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனரனேகருண்டு குள்ளத்தாரா ௩௮
சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா ௩௯
தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாரா நீ
சிந்தைகளித்தாடவடி குள்ளத்தாரா ௪௰
பாக்குமரச்சாலையுண்டு குள்ளத்தாராநீ
பந்துவிளையாடவாடி குள்ளத்தாரா ௪௧

கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாராநீ
கருதியதெல்லாந்தரக் குள்ளத்தாரா சஉ
கெடிலந்தியுமுண்டு குள்ளத்தாரா வதின்
கிளர்காலுமுண்டு குள்ளத்தாரா சங
உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா இந்த
உலகம்பொருக்கலையே குள்ளத்தாரா சச
அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா சரு
கிள்ளைநேர்மொழியினளே குள்ளத்தாரா நீ
கிருபைசெய்துவாருமேயாடி குள்ளத்தாரா சசு
மயில்போலுஞ்சாயலாளே குள்ளத்தாரா என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா சஎ
அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா உன்
நகமுமிரங்காதோ குள்ளத்தாரா சஅ
அடைக்காயும்வெற்றிலையுங் குள்ளத்தாரா வெனக்
கருந்தவரியாயோடி குள்ளத்தாரா சகூ
வாசனைதிரவியங்கள் குள்ளத்தாரா நீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா ருய
சண்பகமலர்விதமும் குள்ளத்தாரா நீ
சம்பிரமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா ருக

பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தாராநீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா ௫௨

பாலும்நீரும்போலவடி குள்ளத்தாரா நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா ௫௩

மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா இந்த
வையகமுள்ளளவுமடி குள்ளத்தாரா ௫௪

குள்ளத்தாராசிந்து

முற்றிற்று.